Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 1, 2022

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 01, 2022 | ஒளி: 07 கதிர்: 220 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 47 பேருக்கு கொரோனா; 27 ரயில் சேவைகள் இரத்து

பத்து ரயில் நிலையங்களில் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் உட்பட 47 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், 27 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மருதானையில் 05 கட்டுப்பாட்டாளர்கள் உட்பட 17 பேருக்கும், மாத்தளை, அளுத்கம, சிலாபத்தில் தலா மூவருக்கும், மஹவ, அநுராதபுரம், மட்டக்களப்பில் தலா ஒருவருக்கும் கண்டியில் எழு பேருக்கும், நாவலப்பிட்டியில் ஐவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# முட்டை வீச்சுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை

### பக்கச் சார்பற்ற விசாரணை கோருகிறார் பிரசன்ன



கம்பஹா, கலகெடிஹேனவில் மக்கள் விடுதலை முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் முட்டை வீசப்பட்ட சம்பவம் தொடர்பில் தனக்குத் தொடர்பு இருப்பதாக வெளியாகும் செய்திகளை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மறுத்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து, பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி, அதற்கு காரணமானவர்களை பதவிநிலைகளைப் பாராமல் தண்டிக்குமாறு ஜனாதிபதி மற்றும் பொலிஸ் மா அதிபரிருக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# முட்டை வீச்சின் பின்னணியில் அரசியல் தலையீடு



கம்பஹா, கலகெடிஹேனவில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை இலக்கு வைத்து, முட்டை வீசப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருப்பது தெரியவந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### சுகாதார வழிகாட்டுதல்கள்

# பெப்ரவரி 28 வரை நீடிப்பு

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை இந்த மாதம் முழுவதும் தொடர்ந்து செயற்படுத்த சுகாதாரத்துறையின் பிரதானிகள் தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் அடங்கிய சுற்றறிக்கையின் செல்லுபடியாகும் காலம் எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

டிசெம்பர் மாத இறுதியில் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் அடங்கிய சுற்றறிக்கை நேற்றுவரை (31) நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திருத்தங்களுக்கு உட்பட்டு (சிறப்பு காரணங்களுக்கு மட்டும்) இந்தச் சுற்றறிக்கை பெப்ரவரி 28ஆம் திகதி வரை தொடர்ந்து அமலில் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கடைபிடிக்குமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### படகுகள், வலைகளுடன்

# மீனவர்கள் வீதிமறியல்

■ வி.நிதர்ஷன்





வடமராட்சி, பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் வலைகள், தமிழக மீனவர்களால் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

அதனைக் கண்டித்து சுப்பர்மட பகுதியில் படகுகள், வலைகளை வீதியில் வைத்து மீனவர்கள் நேற்று (31) வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அவ் வீதி ஊடான போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

தொடர்ச்சி P2

### பல நடவழக்கைகளை எதிர்த்து

# மன்னாரில் கவனயீர்ப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்





மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மணல் அகழ்வு உள்ளடங்கலாக பல்வேறான சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், நேற்று (31) காலை கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார், பஜார் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் சிலைக்கு முன்பாக இப்பேரணி ஆரம்பமாகி, மன்னார் மாவட்டச் செயலகப் பகுதியை வந்தடைந்தது.

பேரணியில் ஈடுபட்டவர்கள், மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

# சுதந்திர தினத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி



இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### டோஹாவில் துப்பாக்கிச் சூடு:

# உயிரிழந்தவர் இலங்கையர் அல்ல

கட்டாரின் டோஹாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர் இலங்கையர் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்டாரில் உள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் பிரிவின் தலைவர், பிரதேச பொலிஸாரிடம் வினவியதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டதாக பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# லங்கா சதொச மூலம் 75 ரூபாய்க்கு தேங்காய்



லங்கா சதொச விற்பனை நிலையங்கள் மூலம் இந்த வருடம் முழுவதும் தேங்காயை 75 ரூபாய் என்ற நிலையான விலையில் நுகர்வோர் கொள்வனவு செய்ய முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பெருந்தோட்ட அமைச்சும் தென்னை ஆராய்ச்சி நிறுவனமும் வர்த்தக அமைச்சும் லங்கா சதொச நிறுவனத்துடன் நேற்று (31) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

தொடர்ச்சி P2

# 29 வைத்தியசாலைகளில் பரீட்சை மத்திய நிலையங்கள்



29 வைத்தியசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### உழைக்கும் மக்களின் உரிமைகளை

# நசுக்க அரசாங்கத்துக்கு உரிமை இல்லை

இலங்கையில் உழைக்கும் மக்களின் வேலைநிறுத்த உரிமையைத் தடை செய்ய வேண்டும் என நீதியமைச்சர் கூறியுள்ளமையே தற்போதைய அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால், அது நாட்டின் ஜனநாயகம் மற்றும் உழைக்கும் மக்களின் சுதந்திரத்தின் மீதான கொடிய தாக்குதலாகவே கருதப்பட வேண்டும் என நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# மறு அறிவித்தல் வரை மின்வெட்டு இல்லை



சம்பந்தப்பட்ட மின் நிலையங்களுக்கு உரிய எரிபொருள் கையிருப்புகள் கிடைத்துள்ளமையால், மறுஅறிவித்தல் வரை மின்வெட்டு அமல்படுத்தப்படாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நேற்று (31) தெரிவித்தது.

தொடர்ச்சி P2

### தமிழ் இளைஞர்கள் கடத்தல்

# கரன்னாகொடவின் மனு ஏப்ரல் 6இல் விசாரணை



2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மாணவர்கள் ஐவர் உட்பட 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதியாக தம்மை பெயரிட்டமைக்கு எதிராக,

தொடர்ச்சி P2

# டெங்கு பரவும் இடங்களை தேடியது ட்ரோன்

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களைக் கண்டறிவதற்கு ஹொரணையில் நேற்று (31) விசேட ட்ரோன் கமெரா மூலமான தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மேல் மாகாண ஆளுநரும் விமானப்படை மார்ஷலுமான ரொஷான் குணதிலகவின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையை ஆளுநரின் செயற்பாட்டு அறை மற்றும் விமானப்படை இணைந்து இதை மேற்கொண்டன.

தொடர்ச்சி P2

### போதைப்பொருள் கடத்தல்

# 12 பேருக்கு விளக்கமறியல்

350 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட 17 சந்தேகநபர்களில் 12 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய ஐவரையும் விடுதலை செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி தெற்கு சர்வதேச கடற்பரப்பில் வைத்து 350 கிலோ கிராம் ஹெரோயின் தொகையுடன் 2 ட்ரோலர் படகுக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 01பெப்ரவரி 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# முட்டை வீச்சுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை

ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு எழுத்துமூலம் அவர் எழுதிய கோரிக்கை கடித்திலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்திலும் நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் அரசியல் கூட்டங்களை நடத்துவதற்கான ஜனநாயக உரிமையை ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளிப்பதாக அமைச்சர் ரணதுங்க தனது கடிதத்தில் அறிவித்துள்ளார்.

தாக்குதலை நடத்தியவர்கள் மற்றும் தாக்குதலுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தனக்கு தொடர்பு இருப்பதாக சமூக ஊடகங்களில் பரப்பப்படும் கூற்றுகளையும் அமைச்சர் ரணதுங்க மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அநுரகுமார திஸாநாயக்கவின் வாகனத்தின் மீது முட்டைகளை வீசுவதற்கு, நபரொருவருக்கு 5,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

# முட்டை வீச்சின் பின்னணியில் அரசியல் தலையீடு

முட்டைகளை வீசுவதற்கு, நபரொருவருக்கு தலா 5,000 ரூபாய் வீதம் 10,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சம்பவம் இடம்பெற்றவுடன் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியதன் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தெளிவாகிறது என்றும் குறிப்பிட்டார்.

இச்சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருப்பதை எந்த ஒரு தனி நபரும் மறைக்க முடியாது என்றும் இவ்வாறான விடயங்களை மறைக்க முற்பட்ட போதிலும் மக்கள் உண்மையை உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தமது பயணத்தை தடுக்க சட்டவிரோத குழுக்களை பயன்படுத்த முடியாது என்றும், அத்தகைய குழுக்களால் தமது பயணத்தை தடுக்க முடியாது என்றும் கூறினார்.

இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடுவது பொதுமக்களிடையே மேலும் அதிருப்தியை ஏற்படுத்தும் எனவும் தேசிய சுதந்திர முன்னணி என்பது மக்கள் சக்தியுடன் உருவாக்கப்பட்ட மக்கள் இயக்கம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டது என்றும், தற்செயல் நிகழ்வு அல்ல என்றும் தெரிவித்த அவர், நிலைமையைக் கட்டுப்படுத்த முயன்றபோது மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினரொருவரும் காயம் அடைந்ததாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு குழுக்களைப் பயன்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

# பெப்ரவரி 28 வரை நீடிப்பு

கடந்த முறை வெளியான சுகாதார வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டிருந்த சில முக்கிய விடயங்கள்,

திருமண நிகழ்வுகளின் போது மண்டபத்தின் வழமையான கொள்ளளவில் அதிகபட்சமாக 50 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், மதுபானம் வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த நேரத்திலும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும் மொத்த நபர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அறிவுறுத்தல்களுக்கு இணங்காத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவகங்களில் உணவருந்துவோர், கடைகள், அங்காடிகள், மருந்தகங்கள், மளிகைக் கடைகள் ஆகியவற்றில் அவற்றின் கொள்ளளவில் 50% பேர் அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரையரங்குகள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அதன் கொள்ளளவில் 75 சதவீதம் பேர் அனுமதிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர்கள் வீதிமறியல்

தமக்கான தீர்வு கிடைக்கும் வரையில் தாம் வீதியை மறித்து தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், “தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்தோம். பல கட்டங்களாக போராட்டங்களை முன்னெடுத்தோம். அவை எதற்குமே பயனில்லை.

“மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. அவர்களை கட்டுப்படுத்தவோ அவர்களைத் தடுத்து நிறுத்தவோ எவரும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

“அத்துமீறி எமது எல்லைக்குள் நுழையும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டியடிக்க எம்மால் முடியும். ஆனால், நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டும், நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்திலையே நாம் பொறுமை காக்கின்றோம்.

“அத்துமீறும் மீனவர்களை, அவர்களின் படகுகளுடன் சிறைப்பிடித்து எமது கரைக்கு கொண்டு வரவும் எம்மால் முடியும். எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

“அதேவேளை, எமது பிரச்சினைகள் தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ளாவிடின், நாம் சீனாவின் உதவியை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்” என்றனர்.

# மன்னாரில் கவனயீர்ப்பு

குறித்த போராட்டமானது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வுக்கு எதிராகவும், குறித்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், மன்னார் பகுதியில் அமைக்கப்பட்ட உயர் மின் வலு காற்றாடிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற வீதிகள் தரமற்றதாகக் காணப்படுகின்றமை குறித்தும், போதைப்பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி, மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், இந்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் கவனயீர்ப்பு இடம்பெற்றது.

இதில் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், நகர சபை பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் பின் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை வழங்கினர்.

இவ்விடயங்கள் தொடர்பில் உரிய உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# சுதந்திர தினத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

தொடர்ந்து தெரிவித்த அவர், “நாளைய சவால்களை வெற்றிக்கொள்ளும் வளமான நாள்” என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இந்த வருடம் சுதந்திர தின நிகழ்வு அனுஸ்டிக்கப்படவுள்ளது என்றார்.

மேலும் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளில் சுமார் 6,500 பேர் வரை கலந்துகொள்ளவுள்ளனர் என தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன, இதில் 3,463 இராணுவத்தினரும் 919 கடற்படையினரும் 804 விமானப் படையினர், 336 பொலிஸார், 437 சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மாணவர் படையணியைச் சேர்ந்த 259 பேரும் கலந்துகொள்வர் என்று தெரிவித்தார்.

இவ்வாறு கலந்துகொள்ளும் அனைவரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி விசேட உயிர்க்குமிழி (பயோபபிள்) முறையில் கலந்துகொள்வதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சுதந்திரதினத்தை முன்னிட்டு, கொழும்பு நகரம் மற்றும் மேல் மாகாணத்தை மய்யப்படுத்தி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், இதற்காக பொலிஸ், விசேட பொலிஸ் பிரிவு, இராணுவத்தினர் அடங்கலாக 3,000 பேருக்கும் அதிகமானோர் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றார்.

சுதந்திர தின விழா நடைபெறும் 4ஆம் திகதியன்று, 21 வீதிகளின் போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்படும் என்பதால் பொதுமக்கள் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட முன்னாயத்த பயிற்சி 3ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் இதற்காக சுதந்திர சதுக்கத்தை அண்மித்த பகுதிகளில் வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்காக காலை 6 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை சில சில வீதிகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் என்றார்.

இதேவேளை, இம்முறை சுதந்திர தின பேரணியின் போது, கடற்படையினர் 25 மரியாதை வேட்டுகள் பகல் 12 மணியளவில் காலி முகத்திடலில் தீர்க்கப்படும் என கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் நிசாந்த உலுகேதன்ன தெரிவித்தார்.

அத்துடன் விமானப் படையினரின் சாகசங்களும் வானில் நிகழ்த்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிரிழந்தவர் இலங்கையர் அல்ல

உயிரிழந்தவர் இலங்கை பிரஜை அல்ல என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தியிருந்தனர். மேலும் குறித்த பகுதியில் உள்ள வைத்தியசாலைகளை பரிசோதித்த போது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இலங்கை பிரஜை தொடர்பான தகவல்கள் எவையும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# நசுக்க அரசாங்கத்துக்கு உரிமை இல்லை

இதுதொடர்பில் அவ்வியக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய, நேற்று (31) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில் மேலும் தெரிக்கப்பட்டிருந்ததாவது: அரசாங்கத்துக்குள் அத்தகைய நடவடிக்கையால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் அல்லது அதை திரும்பப் பெற வேண்டும் என்பது எங்களின் வலுவான கருத்து.

தொழிற்சங்கத்தின் உரிமைகளும் அங்கிகரிக்கப்பட்ட மனித உரிமையாகும். அதேவேளை, இந்த உரிமைகள் உழைக்கும் மக்களின் பறிக்க முடியாத உரிமை மட்டுமல்ல, சமூகத்தின் நியாயப்படுத்தல் மற்றும் நீடித்த அமைதிக்கான ஒரு சக்திவாய்ந்த காரணியாகவும் பார்க்க முடியும்.

அதற்கமைய, இவ்வாறான முயற்சிகளை முறியடிக்க நாட்டிலுள்ள அனைத்து உழைக்கும் மக்களையும் நிபந்தனையின்றி ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

# லங்கா சதொச மூலம் 75 ரூபாய்க்கு தேங்காய்

அங்கு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே வர்த்தக அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தேங்காய் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோருக்கு குறைந்த விலையில் தேங்காய்களை வழங்குவதே வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் என அமைச்சர் குணவர்தன தெரிவித்தார்.

ஒரு நுகர்வோர் ஐந்து தேங்காய்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் இதன் விற்பனையானது சில்லறை விற்பனையை அடிப்படையாகக் கொண்டது எனவும் மொத்த விற்பனையாகாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேங்காயை வாங்க முடியாதவர்கள் அதற்குப் பதிலாக ஏற்றுமதி தரமான இரண்டு தேங்காய் கொள்ளவுடைய பால் கொள்கலனை ரூ.150க்கு வாங்கலாம் என்றார்.

சந்தையில் தேங்காய் விலை குறைந்தால் விலையை குறைப்போம் என அமைச்சர் குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, கொழும்பு மாவட்டத்தை முதன்மைப்படுத்தி இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டங்கள் தொடரும் போது விலை மாற்றத்தின் பலனை பொதுமக்களுக்கு வழங்க முடியும் என்று நம்புவதாக அமைச்சர் பத்திரன தெரிவித்தார்.

மேலும், உலக சந்தையில் நாளாந்த வளர்ச்சியின் காரணமாக தேங்காய் தொடர்பான பொருட்களின் ஏற்றுமதி இந்த ஆண்டு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

உலக சந்தையில் இலங்கை தேங்காக்கு கிராக்கி நிலவுவதாகவும், இதன் விளைவாக கடந்த ஆண்டு தேங்காய் ஏற்றுமதியின் மூலம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலாபம் ஈட்டியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 29 வைத்தியசாலைகளில்...

கெரோனா தொற்றுக்குள்ளான மாணவர்கள், அந்த வைத்தியசாலைகளிலுள்ள பரீட்சை நிலையங்களிலிருந்தே பரீட்சைக்கு தோற்ற முடியும் எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

உயர்தர மாணவர்கள் சார்பில் ஒவ்வொரு பரீட்சை நிலையத்திலும் வைத்தியர்கள் குழுவொன்று கடமையில் ஈடுபடுத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்றுள்ள உயர்தர மாணவர்களுக்கு அந்ததப் பரீட்சை நிலையங்களில் தேவையான சிகிச்சை அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# டெங்கு பரவும்...

ஹொரணை சுகாதார வைத்திய அதிகாரி, ஹொரண பொலிஸ் மற்றும் ஹொரண மாநகர சபை ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ட்ரோன் கமெரா மூலம் நகரில் உள்ள கட்டடங்கள் உட்பட உயரமான இடங்களில் டெங்கு பரவும் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பின்னர், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் அந்த இடங்களின் உரிமையாளர்களை எச்சரித்துள்ளனர்.

# கரன்னாகொடவின் மனு ஏப்ரல் 6இல் விசாரணை

வடமேல் மாகாண ஆளுனர் அட்மிரல் வசந்த கரன்னாகொட தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு அழைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (31) தீர்மானித்தது. குறித்த மனுவை எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இந்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இடம்பெறும் வழக்கு விசாரணைகளை இடைநிறுத்துமாறு அறிவித்து அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

தன்னை பிரதிவாதியாக பெயரிடும் தீர்மானம் ஆதாரமற்றது என்றும் அதனை இரத்து செய்யும் நீதிப் பேராணை கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

2008ஆம் ஆண்டு, தெஹிவளையில் வைத்து ரஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஷ்வரம் ராமலிங்கம், மொஹம்மட் நிலான், மொஹம்மட் சாஜித் ஆகிய மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

அதேஆண்டு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன், ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆரச்சி, திருகோணமலையைச் சேர்ந்த கனகராஜா ஜெகன், தெஹிவளையைச் சேர்ந்த மொஹம்மட் அலி அன்வர் ஆகியோரும் கொழும்பில் கடத்தப்பட்டிருந்தனர்.

# மறு அறிவித்தல் வரை மின்வெட்டு இல்லை

ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க ஊடகங்களுக்கு வெளியிட்ட விசேட அறிக்கையொன்றிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையின் மின்வெட்டுக்கான யோசனையைத் தொடர்ந்து, மின் உற்பத்தி நிலையங்களின் நிலை மற்றும் எரிபொருள் விநியோகம் குறித்து நாங்கள் தொடர்ந்து மீளாய்வு செய்தோம் என்று தெரிவித்த அவர், மின்வெட்டு தேவையில்லாததால் அதை அனுமதிக்கவில்லை என்றார்.

இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த மீளாய்வின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட மின்வெட்டு தொடர்பான யோசனைக்கு பெப்ரவரி 4ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் குறிப்பிட்டார்.

மின்வெட்டு அமல்படுத்தப்பட்டால் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களும் இந்த தீர்மானத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முதல் மீண்டும் செயற்பட ஆரம்பித்த நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்றாவது ஜெனரேட்டரில் இருந்து சுமார் 200 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது என்றார்.

நேற்றைய தினம் வரை மின் வெட்டு அமுல்படுத்தப்படாது என்று கடந்த வியாழக்கிழமையன்று ஆணைக்குழு அறிவித்திருந்தது.

# பாடசாலைகளை விரைவாக மூடுக

ஜூட் சமந்த

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மாணவர்களின் பாதுகாப்புக் கருதி, நோய் தொற்றுக்குள்ளான மாணவர்கள் உள்ள வகுப்பறைகள் மூடப்பட்டுள்ளதாக இலங்கை அதிபர் சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு, நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் விரைவாக மூட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், நாட்டிலுள்ள பாடசாலைகளை உடனடியாக மூடாவிட்டால், சாதாரண தரம், உயர்தரம் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அவர் இதன்போது எச்சரித்துள்ளார்.



# சிற்றுண்டிச்சாலைகள் திறக்காமையால் சிக்கல்

துசித டி சில்வா



பேருவளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் அதனை ஒப்பந்த அடிப்படையில் பெற்று கொண்டவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலைகளை நடத்திச் செல்வோர் தெரிவிக்கின்றனர்.

கொரோனா வைரஸ் பரவலால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளை தொடர்ந்து மூடிவைத்திருப்பது பாரிய அநீதியாகும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பேருவளையில் உள்ள தேசிய, மாகாண, கலவன் பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டிருப்பதால் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

இதனால், சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய சிற்றுண்டிச்சாலைகளை திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொரோனாவால் மாணவி உயிரிழப்பு

ஜூட் சமந்த



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சிகிச்சை பெற்றுவந்த மாணவி உயிரிழந்துள்ளதாக நாத்தாண்டிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாத்தாண்டியாவில் உள்ள பாடசாலை ஒன்றில், தரம் 06இல் கல்வி கற்கும் தப்போவ பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக மாரவில ஆதார வைத்தியசாலையில் இந்த மாணவி சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மாணவியின் தந்தையான ஆசிரியர், தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

# விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது



அதிகரித்துள்ள உரத்தின் விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் சானக்க வக்கும்புர, கொரோனா வைரஸ் பரவலால், உலக சந்தையில் உரத்தின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் உரத்துக்கான தட்டுப்பாடு இல்லை. யார் வேண்டுமானாலும் நாட்டுக்கு உரத்தை இறக்குமதி செய்ய முடியும்.

எவ்வாறாயினும் உரத்துக்கான விலைகள் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கிறார்கள். எனவே உரத்தின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உலக சந்தையில் கொரோனா வைரஸால் உரத்தின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் இதில் மாற்றங்கள் ஏற்பட்டு உரத்தின் விலை குறைவடையும். விவசாயிகளுக்கு தேவையான தரமான உரத்தைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் இதன்போது கூறினார்.

# சபாநாயகர் குணமடைய சீன சபாநாயகர் வாழ்த்து

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன விரைவில் குணமடைவதற்கு வாழ்த்துத் தெரிவித்து சீன பாராளுமன்றத்தின் சபாநாயகர் லீ சன்ஷூ கடிதம் அனுப்பியுள்ளார்.

கொவிட்-19 சவாலின் ஆரம்பத்திலிருந்து இலங்கையும் சீனாவும் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர உதவிகளைப் புரிந்திருப்பதுடன், இதன் மூலம் இரு நாட்டுக்கும் இடையிலான பாரம்பரிய உறவு பலமடைந்துள்ளது.

தொற்றுநோய்க்கு எதிராகப் போராட சீனா தொடர்ந்தும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என்றும் சீன சபாநாயகர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளின் சட்டவாக்க சபைகளுக்கு இடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதன் ஊடாக, இலங்கையுடனான உறவுகளை மேலும் மேம்படுத்த சீனா உத்தேசித்துள்ளதாகவும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கன்னியாஸ்திரியை காணவில்லை

ஜூட் சமந்த

காட்டில் தியானம் செய்துகொண்டிருந்த கன்னியாஸ்திரி ஒருவரை காணவில்லை என சாலியவெவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாலியவெவ, ரம்பவெவ வனத்தில் உள்ள மடத்தில் தியானம் செய்துகொண்டிருந்த 74 வயதுடைய கன்னியாஸ்திரியே காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பட்டப்படிப்புகளுக்கு

# புலமைப்பரிசில்களை வழங்க இணக்கம்

பிரித்தானியாவின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் இளங்கலை மற்றும் முதுகலை கற்கைநெறிகள் மற்றும் குறுகிய கற்கைநெறிகளுக்காக புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அப்பல்கலைக்கழக தலைவர் இணங்கியுள்ளார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தலைவருக்கும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

பெண்கள் அதிகாரமளித்தல் போன்ற துறைகளில் இளங்கலை மற்றும் முனைவர் பட்டங்களுக்கான குறுகிய படிப்புகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இரு தரப்பினரும் இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டனர்.

இதேவேளை, இலங்கையிலுள்ள குறைந்த வருமானம் கொண்ட வறுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் பாடநெறிகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதே தமது நோக்கம் என பியல் நிஷாந்த இதன்போது தெரிவித்துள்ளார்.



2022 ஜனவரி 29 வரை

# 76,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை

இவ்வருடம் ஜனவரி 1ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 76,538 சுற்றுலா பயணிகள், இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என, சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ரஷ்யாவிலிருந்து 12,368 சுற்றுலாப் பயணிகளும் இந்தியாவில் இருந்து 11,028 பேரும் உக்ரைனில் இருந்து 7,427 பேரும் வருகை தந்துள்ளனர்.

29 நாள்களில் இங்கிலாந்தில் இருந்து 6,929 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியில் இருந்து 4,902 சுற்றுலாப் பயணிகளும், பிரான்சிலிருந்து 3,337 சுற்றுலாப் பயணிகளும் வந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் சமீபத்திய அறிக்கைகளின்படி, போலந்து, அவுஸ்திரேலியா, மாலைதீவுகள், கஸகஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டு 194,495 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன், 2021 ஜனவரியில் 1,682 சுற்றுலாப் பயணிகள் மாத்திரமே இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த ஆண்டு 1.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.





# மின்சாரக் கொள்வனவு கண்துடைப்பு நாடகம்

மின்சாரத்தை அவசரமாகக் கொள்வனவு செய்யும் பட்சத்தில் அதில் ஊழல், மோசடிகள் இடம்பெறலாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தட்டுப்பாடு குளறுபடிகளைக் காண்பித்து, அவசரமாக மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய இலங்கை மின்சார சபை முயல்கிறது என்றார்.

மேலும், 84.5 ரூபாய்க்கு ஓர் அலகு மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய இலங்கை மின்சார சபை தயாராகி வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவசரமாக கொள்வனவுகளை மேற்கொள்ளும்போதே ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றன என்றார்.

மேலும் அவசரமாக மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டுமென அழுத்தம் கொடுப்பவர் யார்? கண்துடைப்புக்காக அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கிறார்கள். இவை அனைத்தும் நாடகமே எனவும் அவர் இதன்போது கூறினார்.

பிள்ளைகளுக்கு அறிகுறிகள் இருந்தால்

# உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்க



பிள்ளைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுக்கான நோய் அறிகுறிகள் காணப்படுமாக இருந்தால், உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்து செல்ல வேண்டும் என லேடி றிச்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமையவே தொற்றுக்குள்ளான பிள்ளைகளை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்க வேண்டும். தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுமாக இருந்தால், காலந்தாழ்த்தாது அவர்களை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்டதன் பின்னர், தொடர்ந்து வைத்தியசாலையில் வைத்து பிள்ளைகளுக்கு சிகிச்சையளிப்பதா? இல்லை என்றால் வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதா? என்பதை வைத்தியர்கள் தீர்மானிப்பார்கள்.

மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவி, மறுநாளே கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளார். இவர் நிமோனியா நிலைக்கு சென்றதன் காரணமாக உயிரிழந்துள்ளார். ஒரே நாளில் இவ்வாறு நிமோனியா நிலைக்கு செல்ல முடியாது. எனவே, பிள்ளைகளுக்குக் தொற்றுக்கான அறிகுறிகள் இருந்தால், அவர்களை உடனடியாக வைத்தியாலைக்கு அழைத்து செல்ல வேண்டும்.

உயிரிழந்துள்ள மாணவியின் பெற்றோருக்கு இரு மாதங்களுக்கு முன்பிருந்தே கொரோனா வைரஸ் தொற்று காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கூறுவதை நிரூபித்தால்

# அடிமை சாசனம் எழுதிக் கொடுப்பேன்

## ஆனந்த சங்கரி சவால்

வி.நிதர்ஷன்

கோடிகளுக்கு அடிமைப் படாத என்னைத் திருடன் எனக் கூறி வருபவர் அதை நிருபித்தால், எனது சொத்துகளை அடிமை சாசனம் எழுதி, அவருக்கு வழங்குவேன் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், “தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாறு தெரியாதவர்களும் கட்சியின் வயதின் கால்பங்கு கூட வராதவர்களுமே, இப்பழம்பெரும் கட்சியை அபகரிக்க முயன்றனர்.

“தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களுடைய சொத்து. நான் பதவிகளுக்கு, கோடிகளுக்கு ஆசைப்பட்டவன் கிடையாது. அன்று, நான் நினைத்திருந்தால் பதவிக்காக எதையும் செய்திருக்கலாம். ஆனால், கொள்கையுடன் பயணிக்க வேண்டும் என்பதற்காக, நான் பதவிகளை ஏற்கவில்லை.

“எனினும், தற்போது எனது கட்சியை அபகரிப்பதற்காக கட்சி தொடர்பில் அறியாதவர்களும் கொள்கை தொடர்பில் அறியாதவர்களும் கூட்டம் கூடி, தமக்குள்ளே நிர்வாகம் தெரிவு செய்கிறார்கள்.

“கட்சியில் யார் அங்கத்துவம் உடையவர்கள் எனக் கூறும் அதிகாரம் எனக்கே இருக்கிற நிலையில், கட்சியின் கோப்புகளும் என்னிடமே இருக்கின்றன.

“ஒருவர் தன்னை உப தலைவர் என்கிறார்; நான் நியமிக்கவில்லை. தானே பெயரைக் கூறிக்கொண்டு அவர் பின்னால் ஒரு குழு வருகிறது, கட்சியை எம்மிடம் தாருங்கள் என.

“புதிய நிர்வாகக் குழுவை எண்ணி, விழுந்து விழுந்து சிரித்தேன்; அழுதேன். என்னுடைய வாழ்நாளில் இப்படியும் ஒரு சம்பவம் நடக்கிறது என.

“நான் யாருக்கும் துரோகம் செய்யவில்லை. யாருடைய பணத்தையும் அபகரிக்கவில்லை. அதனால்தான் கடவுள் என்னை 88 வயதிலும் நடமாடித் திரிய வைத்திருக்கிறான்.

“எனவே, தமிழர் விடுதலைக் கூட்டணியை, சரியான முறையில் ஒழுங்கமைக்கும் வரை, யாருக்கும் கட்சியை விட்டுக் கொடுக்க மாட்டேன். முடிந்தால் கட்சியை அபகரிக்க நினைப்பவர்கள், தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தட்டும்” என்றார்.

காணாமல் போன

## இரு மீனவர்களில் ஒருவரின் சடலம் மீட்பு

எஸ் தில்லைநாதன்



வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் கடந்த 27ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்று காணாமல் போனவர்களில், இளைஞன் ஒருவரின் சடலம், ஆழியவளை கடற் பகுதியில் நேற்று (31) நண்பகல் கரையொதுங்கியுள்ளது.

வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான பிறேம்குமார் மற்றும் அவரின் சகோதரியின் மகனான 21 வயதான தணிகைமாறன் ஆகிய இருவரே காணாமல் போயிருந்தனர்.

இவர்களை, அப்பகுதி மீனவர்கள் மற்றும் விளையாட்டுக் கழகத்தினர் இணைந்து கடற்பரப்பில் இரவு, பகலாகத் தேடி வந்தனர். எனினும், அவர்களையோ, அவர்கள் பயணித்த படகையோ கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், அறுந்த வலைகள் மட்டும் மீட்கப்பட்டிருந்தன.

அவர்களின் படகை இந்திய ரோலர் படகுகள் மோதி விபத்துக்குள்ளாக்கி இருக்கலாம் என மீனவர்கள் குற்றம் சாட்டியிருந்த நிலையில், நேற்று (31) நண்பகல் தணிகைமாறன் என்பவருடைய சடலம், ஆழியவளை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மற்றவர் தொடர்பான தகவல் இதுவரை கிடைக்கவில்லை. தொடர்ந்தும் தேடுதல் நடைபெறுகிறது.

## நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சி

க.அகரன்

வவுனியாவில் நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு, வவுனியா பேராறு நீர்த்தேக்க பகுதியில் நேற்று (31) நடைபெற்றது.

2025ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் நிறைவேற்றப்படுகின்ற வட மாகாணத்தில் நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாகவே, குறித்த நிகழ்வு நடைபெற்றிருந்தது.

இதன்போது, வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதியைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், பேராறு நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதிகளில் 250 மரக்கன்றுகள் நடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## பசுமை அமைதி விருதுகள் விழா









தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழா, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்றது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் பங்கேற்றிருந்தார்.

> மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த சிவகரன் அபிசாய்ராம் தங்கப் பதக்கத்தையும் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஷண்முஹி கருணாநிதி வெள்ளிப் பதக்கத்தையும், மட்டக்களப்பு புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த டிலுக்சினி டன்ஸ்ரன் வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்துக்கொண்டார்கள்

சிறப்பு விருந்தினர்களாக வட பிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே.அரசகேசரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. எம். றியாஸ் அஹமட் ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், கடந்தாண்டு தேசிய ரீதியில் மாணவர்களிடையே இணைய வழியில் சூழல் பொது அறிவுப் பரீட்சையை நடத்தியிருந்தது. இப்பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களும் பசுமை அமைதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களோடு விசேட சித்தி, அதி திறமைச் சித்திபெற்ற மாணவர்களுக்கும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சிவகரன் அபிசாய்ராம் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஷண்முஹி கருணாநிதி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், மட்டக்களப்பு புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த செல்வி டிலுக்சினி டன்ஸ்ரன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்துக்கொண்டார்கள்.

மேலும், 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதை இயற்கை விவசாயி அல்லைப்பிட்டி மகேஸ்வரநாதன் கிரிசன் பெற்றுக்கொண்டார்.



பாடசாலை அதிபரை

# இடமாற்றுமாறு ஆர்ப்பாட்டம்

தீஷான் அஹமட

திருகோணமலை, மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட ஆலிம்சேனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி, பாடசாலையின் முன்பாக நேற்று (31) காலை 07 மணி முதல் நண்பகல் 12 மணி வரை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் நடத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், “ 16 வருடங்கள் தாண்டியும் அதிபர் பதவி வகிக்க இது மன்னராட்சியா?”, “16 வருடங்கள் அதிபராக இருந்து இவர் சாதித்தவை என்ன?”, “கல்வி அதிகாரிகளே அதிபரிடம் இருந்து எமது பாடசாலையை மீட்டுத் தாருங்கள்” உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியவாறு இதன்போது கோஷமிட்டனர்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தந்த மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீம், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் அதிபரை மாற்றுவதாக வாக்குறுதி வழங்கியதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றனர்.

## ‘அரண்’ சஞ்சிகை வெளியீடு

அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ‘அரண்’ சஞ்சிகை வெளியீட்டு விழா, பணிமனை கேட்போர் கூடத்தில் நேற்று (31) நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் கௌரவ அதிதியாகவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி.சுகுணன் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

சஞ்சிகையின் முதற் பிரதி தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், அவர் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.



இராணுவத்தின் உதவியுடன்

## ஆலையடிவேம்பில் தடுப்பூசி செலுத்தல்

வி.சுகிர்தகுமார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், இராணுவத்தின் உதவியுடன் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று (31)முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் வி.பபாகரனின் வேண்டுகோளுக்கமைய, இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கமைவாக, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் மக்களுக்கு, அம்பாறை மாவட்டத்தின் 241ஆம் படைப் பிரிவின் கீழ் வரும் இராணுவத்தின் மருத்துவ பிரிவினரால் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது, 2ஆம் மற்றும் 3ஆம் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத அதிகளவான பொதுமக்கள் வருகை தந்து தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, கடந்த காலத்திலும் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட வைத்திய குழுவினர், அம்பூலன்ஸ் வசதிகளுடன் வீடுகளுக்குச் சென்று தடுப்பூசியை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, பொதுமக்களுக்கான ஆலோசனைகளையும் பிரதேச செயலகம் சுகாதாரத் துறையினருடன் இணைந்து வழங்கி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.





இறந்த நிலையில்

## ஆமையும் டொல்பினும் கரையொதுங்கின

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பிரதேசத்துக்குட்பட்ட களுதாவளைக் கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் ஆமையும், டொல்பினும், நேற்று (31) காலை கரை ஒதுங்கியுள்ளன.

காலை வேளையில் கடற்கரைக்குச் சென்றவர்களே இவற்றை அவதானித்துள்ளனர். இது தொடர்பில் மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக, அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

சுமார் மூன்றரை அடி நீளமாக ஆமையும், 5 அடி நீளமான டொல்பினுமே இவ்வாறு இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன.

கடலுக்குச் சென்ற


## மீனவரின் சடலம் மீட்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர், நேற்று (31) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் (30) மீன்பிடிக்கச் சென்ற காவத்தமுனை பகுதியை சேர்ந்த 74 வயதுடைய அச்சி முஹம்மது ஆதம் பாவா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆழ்கடலில் வைத்து மீனவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதில் மீனவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வைத்தியசாலை ஊழியர்களின் வான் விபத்து

# 9 பேர் காயம்



■ மலையக நிருபர்கள்

டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் பயணித்த வானொன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 09 பேர், அவர்கள் பணியாற்றும் வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (30) மாலை 6.45 மணியளவில் வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

டிக்கோயா பகுதியில் இடம்பெற்ற கிரிகெட் சுற்றுப்போட்டி ஒன்றில் கலந்து கொண்டு திரும்பி செல்லும் போதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகவும், அந்த வானில் 16 பேர் வரை பயணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வானின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமையால், தொழிற்சாலையில் அமைக்கப்பட்டிருந்த சல்லடை கம்பி பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு, சுமார் 20 அடி பள்ளத்தில் பாய்ந்து வான் விபத்துக்கு உள்ளாகியுள்ளது,

இந்த விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் வரை வீதி போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது எனத் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.






## தோட்ட சேவையாளர்களின்

# “பாதுகாப்பை உறுதிப்படுத்துக”

### மஸ்கெலியாவில் அமைதிப் போராட்டம்

■ செ.தி பெருமாள், காமினி பண்டார


தமது சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் நியாயத்தை நிறைவேற்றுமாறும் கோரி, இலங்கை தோட்டத் சேவையாளர் சங்க உறுப்பினர்களால் மஸ்கெலியாவில் அமைதி போராட்டம் நேற்று (31) முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தோட்டத் சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், ஹட்டன்-மஸ்கெலியா பிரதான வீதியின் மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்பாக நேற்று (31) காலை 9.45 மணியளவில் அமைதி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தோட்ட சேவையாளர்கள் தமது கடமை நேரங்களில், தேயிலைத் தோட்டங்களுடன் தொடர்புபடாத வெளி நபர்களாலும், தாம் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களாலும் தாக்குதலுக்கு இலக்காகின்றமை அதிகரித்துள்ளமையால், தமது சேவையாளர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துமாறும் அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில், கிலண்டிலென்ட் தோட்ட சாரதியொருவர், அதே தோட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவரால் 29ஆம் திகதி தாக்குதலுக்கு இலக்கானமையை அடிப்படையாக வைத்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் ஹட்டன் வலய தலைவர் எஸ். சிவராஜ், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## மின் உற்பத்தியை அதிகரிக்க

# மவுஸாக்கலை நீர்த்தேக்கம் சுத்தப்படுத்தப்படுகிறது

■ எஸ்.கணேசன்

மவுஸாக்கலை நீர்தேக்கத்தில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றி, நீர்த்தேக்கத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கை ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மவுஸாக்கலை நீர்தேக்கத்தின் நீர்பாசன பொறியியலாளர்களால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்குத் தீர்வாக, தற்போது இடைக்கிடையே மின் வெட்டு அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, மவுஸாக்கலை நீர் தேக்கத்தில் இருந்து கெனியோன் வரை நீரைக் கொண்டு செல்லும் சுரங்க பாதையை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சுரங்க பாதையில் இடைக்கிடையே கழிவுகள் தேங்கியுள்ளதால் அவற்றை அகற்றி சுத்தப்படுத்தும் பணிகளில் மவுஸாக்கலை நீர்த்தேக்க நீர் பாசன பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

> “ மவுஸாக்கலை நீர் தேக்கத்தில் இருந்து கெனியோன் வரை நீரைக் கொண்டு செல்லும் சுரங்க பாதையை சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நீர்பாசன சுரங்க குழாய்களும் 10 வருடத்திற்கு ஒருமுறை சுத்தப்படுத்த வேண்டியது அவசியம்

ஒவ்வொரு நீர்பாசன சுரங்க குழாய்களும் 10 வருடத்திற்கு ஒருமுறை சுத்தப்படுத்த வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்படுகின்றது.







### நிழல் பிரதி இயந்திரம் கையளிப்பு

நமுனுகுல, கனரவல்ல பெருந்தோட்ட இலக்கம் 01 தமிழ் வித்தியாலயத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான போட்டோ கொப்பி இயந்திரம் (நிழல் பிரதி எடுக்கும் இயந்திரம்) வழங்கும் நிகழ்வு, நேற்று (31) நடைபெற்றது. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் நிதியொதுக்கீட்டின் கீழ், இந்த இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. (படங்கள்: எம். செல்வராஜா)

### பழக்கன்றுகள் நடப்பட்டன

■ பி.கேதீஸ்

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தலவாக்கலை பொலிஸாரால் கிறேட்வெஸ்டன் பாடசாலை, மடக்கும்புர கலாபுவணம் ஆகிய பாடசாலைகளில் பழக் கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டன.

நேற்று (31) இந்நிகழ்வில் கிறேட்வெஸ்டன் பாடசாலையின் பிரதி அதிபர் விஜயசுந்தரம், தலவாக்கலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

## பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு தொடர்பான மனு

# கையெழுத்துகளின் பின்னர் செயலாளரிடம் கையளிப்பு

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு தொடர்பிலான நியாய கோரிக்கையை முன்வைத்து, கடந்த ஒரு மாத காலமாக பொதுமக்கள் மனு கையெழுத்து இயக்கம் நிறைவுக்கு வரும் நிலையில், நுவரெலியா மாவட்டம் முழுவதும் நேரடியாகச் சென்று சேகரிக்கப்பட்ட மக்கள் கையெழுத்துகள் அடங்கிய மனு, நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் , உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு நேற்றைய தினம் (31) காலை இந்த மனு கையளிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜாவின் வழிகாட்டலில், பிரதான அமைப்பாளர் இராமன் செந்தூரன் நுவரெலிய பிரதேச சபை உறுப்பினர் யோகா ஜெகநாதன் ஆகியோரின் இணைத்தலைமையில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



## மாணவர்களுக்காக நடைபெற்ற

# இலவச நடமாடும் சேவை

■ பி.கேதீஸ்

கொத்மலை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச நடமாடும் சேவை முகாமொன்று, ஜனவரி மாதம் 29ஆம் திகதி, கொத்மலை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கெட்டபுலா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில், முகாமில் பிறப்பு சான்றிதழ் அற்ற பாடசாலை மாணவர்களுக்கான பிறப்பு சான்றிதழ்களை பதிவுசெய்தல் , கொரோனா நோய் தொற்றின் பரவுதல் வேகத்தை தடுப்பதற்கான சுகாதார வழிமுறைமைகளை பின்பற்றுதல் உள்ளிட்ட பல்வேறு வகையான செயற்பாடுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வை நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன் , இவ்வாறான நடமாடும் சேவை முகாம்களை அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

## கொரோனா மீது பழி போட முடியாது

# முறையற்ற நிர்வாகமே பிரச்சினைகளுக்குக் காரணம்

### இராதா எம்.பி தெரிவிப்பு

■ எஸ்.கணேசன், துவராகஷின்

இந்த அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகம் காரணமாகவே, நாட்டில் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா கெல்சி தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு தொகை பொருள்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“தேர்தல்கள் காலத்தில் மாத்திரம் மக்களை தேடி வராது, மக்கள் மத்தியில் வந்து அவர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்ப்பது உண்மையான அரசியல். அத்தகைய அரசியலை நாம் இன்றும் முன்னெடுத்து வருகின்றோம்” என்றார்.



இன்று இந்த நாட்டில் பல பிரச்சினைகள் தலை விரித்து ஆடுகின்றன. இதற்கு இந்த அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகமும், உறுதியற்ற தீர்மானங்களுமே பிரதான காரணங்களாகும். மாறாக, எல்லாவற்றையும் கொரோனா மீது சுமத்தி விட முடியாது. இராசாயன உரத்தை தடை செய்து விட்டு, சேதன பசளையை முன்னெடுக்கும் திட்டம் குறித்து, ஒரே இரவில் முடிவு எடுக்கப்பட்டது. அதன் சாதக பாதக தன்மைகள் ஆராயப்படவில்லை. இதனால் விவசாயத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல கொரோனா வைரஸ் தொற்று பரவத் தொடங்கிய காலப்பகுதியிலேயே தடுப்பூசிகளை கொள்வனவு செய்யுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆலோசனை வழங்கினார். அதற்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. அப்போது கொள்வனவு செய்திருந்தால் குறைந்த விலையில் தடுப்பூசிகளை வாங்கிருக்கலாம். இப்படியான முறையற்ற நிர்வாகம் மற்றும் ஊழல்களால் இலங்கைக்குப் பின்னர் சுதந்திரம் பெற்ற பங்களாதேஷிடம் கூட கடன் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

### பால் புரைக்கேறியதால் சிசு மரணம்

■ சுமணசிறி குணதிலக

தாய்ப்பால் புரைக்கேறியதால் 3 மாத சிசுவொன்று உயிரிழந்த சம்பவம் மொனராகலை, ஒக்கம்பிட்டிய பகுதியில் நேற்று (31) பதிவாகியுள்ளது. ஒக்கம்பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே சிசு உயிரிழந்துவிட்டதாக ஒக்கம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜெனீவாவை ஏமாற்றும் வேலைகள் துரிதமாக அரங்கேறுகின்றன

ஐநா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர், பெப்ரவரி 28ஆம் திகதியன்று ஆரம்பமாகி, ஏப்ரல் முதலாம் திகதிவரையிலும் நடைபெறவிருக்கின்றது. இலங்கை தொடர்பான, மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் ஆவணத்துக்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டுக்குள் இலங்கை சிக்கியுள்ளது.

அதற்கு முன்னதாக, இலங்கையில் இருக்கும் தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்களின் பிரதிநிதிகளை ஜனவரி 26ஆம் திகதியன்று வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்திருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னேற்றம் தொடர்பிலான தகவல்களைப் பகர்ந்து கொண்டார்.

2021இல் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும், மனித உரிமைகள் பேரவை உட்பட ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியதை அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

பொறுப்புக்கூறல், நீதி மறுசீரமைப்பு, அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, உள்நாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளினூடாக இலங்கை அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக விளக்கமளிக்கப்பட்டது.

மறுநாள், பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வெளியாகின. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பலரும், விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அந்தச் சந்திப்பின் போது ஜி.எல் பீரிஸ் எடுத்துக்காட்டியிருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த 16 பேர், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழும், மேலும் 13 பேரென மொத்தமாக, 29 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டிருந்தார். இவர்களில் பெரும்பாலானவர்கள், தங்களுடைய தண்டனைக் காலம் நிறைவடைவதற்கு, மிகக் குறுகிய நாள்களே இருக்கவேண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

43 வருடங்களின் பின்னர், பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கு வரவேற்பும் கிடைத்துள்ளது. ஆனால், முழுமையாக இரத்துச் செய்யப்படவேண்டுமென்ற குரல் ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாத திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தங்களை ஒரு தளர்வாக மட்டுமே பார்க்கமுடியும். நீதிமன்ற அனுமதியின்றி 18 மாதங்கள் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த விடயம், 12 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யலாம்; சட்டத்தரணி பார்க்கலாம்; உறவினர்கள் தொடர்புகொள்ளலாம்; சந்தேகநபரின் நிலையை ஆராய, நீதவானுக்கும் அனுமதி என, இவையெல்லாம் நீதிமன்ற கட்டமைப்புக்குள் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களே தவிர, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவருக்கு, நிரந்தர நிவாரணம் கிடைத்து விட்டதெனக் கருதமுடியாது.

ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், மனித உரிமைகள் பேரவையின் காதுகளில் பூவைச் சுற்றுவதற்கு ஆங்காங்கே திருத்தப்பட்டுள்ளது. முற்றாக நீக்கும் வரையிலும் விமோசனம் இல்லை. அதனை எதிர்பார்ப்பதும் முட்டாள் தனமாகுமென்பது தெட்டத்தெளிவாகின்றது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

பாசத்துக்குள் மனித பலவீனங்கள் புகுந்து கொள்கின்றன. பல சமயங்களில் பாச உணர்வே சிலருக்குப் பிரச்சினைகளை உருவாக்கிவிடுகின்றன.

அன்பானவர்களின் அதீத பாசத்தால் தவறான, தமக்கு விருப்பமில்லாத செயல்களைக்கூட செய்யவேண்டியுள்ளது. அன்புவலையில் கட்டுண்டுவிட்டால், நியாயதர்மங்களை விட்டுவிலகுதலாகாது.

இதைப் புரிந்துகொள்ளாது பலர் தங்கள் தேவைகளை, வலிந்து திணிப்பது கூடாது. உறவினர்கள், நண்பர்களை விட்டுக்கொடுக்காமல், அவர்கள் கேட்பதற்கு எல்லாம் தலையாட்டி விடுகின்றனர்.

குடும்பங்களில் தாய் சொல்லைக் கேட்பவர்கள், மனைவிக்குப் போதிய உரிமை கொடுக்காமல் இருப்பதுவும் மனைவிக்காகப் பெற்றோர் பேச்சைக் கேட்காமல் இருபதுவும் நல்லதல்ல!

ஒருவரால் முடியாததும், நீதிக்குப் புறம்பானதும், விரும்பாததும், மிகவும் கஷ்டமானதும், பொருளாதாரத்தைத் தாக்குகின்றதும், நிலைமை புரியாமல் உதவிகளைக் கட்டளை இடுவதுபோல கேட்பதும் மகா பாவச்செயல்; இம்சைப்படுத்தல் தகாது.

இளகிய மனம் உள்ளவர்களின் மன இயல்பைப் புரிந்தும் வற்புறுத்துதல் நாகரிகமே அல்ல. பாசம் புனிதமானது; இனிமையானது உணர்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம் சமூகம் திருந்தாத வரை

# அரசியல்வாதிகளை திருத்த முடியாது

மொஹமட் பாதுஷா

ஒரு பிள்ளைக்கு, சிறு வயதிலிருந்தே பூனையைக் காட்டி, "இதுதான் யானை" என்று சொல்லிப் பழக்கி வந்தால், அந்தப் பிள்ளை பெரிய ஆளாக வளர்ந்தாலும், உண்மையான யானையை, யானை என்று ஏற்றுக் கொள்ளத் தயங்கும். பூனையே அதனது எண்ணங்களில், யானையாக இருக்கும். இது எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

குறிப்பாக, ஒரு சமூகம் எவ்விதமான அரசியல் கோட்பாடுகளால், கலாசாரத்தால் கட்டமைக்கப்படுகின்றதோ, எவ்விதம் அரசியல் மயப்படுத்தப்படுகின்றதோ, அதையே 'சரியான அரசியல் வழிமுறை' என்று நம்பிக் கொண்டிருக்கும். அவ்வாறு நம்பிக் கொண்டிருக்கும் காலம் வரைக்கும், சமூகம் தன்னை மாற்றிக் கொள்ளவும் மாட்டாது; அரசியல்வாதிகள் திருந்தப் போவதும் இல்லை.

இதற்கு, நிகழ்காலத்தில் மிகச் சிறந்த உதாரணமாக, இலங்கை முஸ்லிம் அரசியலைக் குறிப்பிடலாம்.

கடந்த இரு தசாப்தங்களில், பிரதிநிதித்துவ அரசியலுக்குள் பிரவேசித்த முஸ்லிம் அரசியல்வாதிகள், சமூகத்தின் நீண்டகாலப் பிரச்சினைகளையோ குறுங்கால எதிர்பார்ப்புகளையோ நிறைவேற்றவில்லை. சமூகப் போராட்ட வீரர்கள் போல, தேர்தல் மேடைகளில் முழங்குகின்ற இவர்கள், பிற்பாடு பெருந்தேசியத்தின் செல்லப் பிள்ளைகளாகி விடுவதுதான் வழக்கமாக இருக்கின்றது.

சமூகத்தின் நலனை மையமாகக் கொண்ட அரசியல் நகர்வின் ஊடாகவோ அல்லது, பேரம்பேசும் அரசியலின் மூலமாகவோ, பல விடயங்களை இக்காலப் பகுதியில் சாதித்திருக்க முடியும். குறைந்தபட்சம் முஸ்லிம்களின் அரசியலில், ஓர் அங்குல முன்னேற்றத்தையாவது ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால், ஒரு பெருந்தேசிய கட்சியை வசைபாடி, மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு, அதேகட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், பின்கதவால் 'டீல்' பேசி, 'பிரதியுபகாரங்களை' பெற்றுக் கொண்டு, கூட்டத்தோடு சோரம் போவதே முஸ்லிம் அரசியல் கலாசாரமாகியுள்ளது.

சமூகத்தின் உரிமை, கௌரவம் போன்ற விடயங்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு, குறைந்தபட்சம் வாழ்வாதார நெருக்கடிகள் பற்றிப் பேசுவதற்குக் கூட, திராணியற்ற ஓர் அரசியல் 'பேய்க்காட்டி'களின் கூட்டத்தையே, நாம் அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதாவது இந்தப் 'பூனை'களையே, சமூகம் 'யானை'கள் என்று நம்பிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள், அவர்கள் அதிகாரத்தில் இருந்தாலும் இல்லாத போதும், அச்சமூகத்தின் உரிமைக்காக இடைவிடாது குரல் கொடுத்து வருகின்றனர். தமிழர்களுக்குத் தீர்வு கிட்டியதா, கிட்டுமா? என்பதெல்லாம் இரண்டாவது விடயம். ஆனால், எல்லாக் காலத்திலும் தமிழர் அரசியல் உயிர்ப்புடன் உள்ளது.

பெரும்பான்மை மக்களை மையப்படுத்திய பெருந்தேசிய அரசியலும், இயல்பாகவே எப்போதும் சிங்கள மக்களின் நலனில் கவனமாகவே இயங்கி வருகின்றது. ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் மாத்திரம், இதற்கு விதிவிலக்கான, என்னவென்று வரையறுக்க முடியாத ஒரு 'கேடுகேட்ட' அரசியலை செய்து வருகின்றார்கள்.

25 வருடங்களாக எம்.பியாக, அமைச்சராக இருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் முதற்கொண்டு, இந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் வரை எல்லோரும், மேடையில் பேசும் போதும் ஊடகங்களுக்கு அறிக்கை விடுகின்ற போதும், "சமூகத்துக்காக உயிரைக் கொடுப்போம்" என்றுதான் பேசுகின்றார்கள்.

இருப்பினும், நிஜத்தில் சமூகத்தைப் பயன்படுத்தி பதவி, பணம் என நிறையச் சம்பாதித்திருக்கின்றார்களே தவிர, சமூகத்துக்காக உருப்படியாக எதையும் பெற்றுக் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதுமட்டுமன்றி, இப்படிச் செய்வதுதான் சிறந்த அரசியல் என்ற பொய்த் தோற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

அதனால், போகப் போக இன்னுமின்னும் மோசமான வியாபாரிகளும் குள்ளநரிகளும் சமூகத் துரோகிகளும் 'டீல்' மன்னர்களுமே முஸ்லிம் அரசியலுக்குள் பிரவேசித்துக் கொண்டு இருப்பதையும் காண முடிகின்றது.

தேர்தல் மேடைகளில் எப்படிப் பேசினால், கட்சியின் எந்த கீதத்தை ஒலிக்க விட்டால், எவ்வளவு பணம் செலவழித்தால், இம்முறை வெற்றி பெறலாம் என்ற கணக்கு, அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரியும்.

பெருமளவு முஸ்லிம் மக்களை உணர்ச்சிகரப் பேச்சாலும், இன்னும் சிலரை இனவாதத்தைத் தூண்டியும் கவரலாம் என்பதையும் குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களுக்கு, கடைசி நாளில் பணத்தை, பொருளைக் கொடுத்தாவது 'வழி'க்குக் கொண்டு வரலாம் என்பதையும், அவர்கள் நன்றாகக் கற்று வைத்திருக்கின்றார்கள்.

அப்படியென்றால், முஸ்லிம் அரசியல் இந்தளவுக்குக் கெட்டுக் குட்டிச்சுவராகிப் போனதற்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி, முஸ்லிம் மக்களும்தான் காரணம் என்பதை, அடிக்கோடிட்ட வார்த்தைகளால் குறிப்பிட வேண்டியுள்ளது.

முஸ்லிம் கட்சித் தலைவர்கள், எம்.பிக்கள் சமூகத்தின் நலனுக்காக முன்னிற்கவில்லை என்பது, ஒவ்வொரு முஸ்லிம் பொது மகனுக்கும் தெரியும். தேநீர்க் கடைகள் உள்ளடங்கலாக, அரசியல் பேசப்படுகின்ற ஒவ்வோர் இடத்திலும் இதை மக்கள் வெளிப்படையாக விமர்சித்து, கெட்ட வார்த்தைகளால் தூற்றுகின்றனர்.

அப்படியென்றால், இந்தச் சமூகம் என்ன செய்ய வேண்டும்?......

முஸ்லிம் அரசியல்வாதிகளிடம், இதுபற்றிக் கேள்வி எழுப்ப வேண்டும். அவர்கள், தமது பதவிக் காலத்துக்குள் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றால், அடுத்த தேர்தலில் சம்பந்தப்பட்டவர்களை தெளிவாகத் தோற்கடித்து, வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அவர் யாராக இருந்தாலும் சரியே!

ஆனால், நிஜத்தில் என்ன நடக்கின்றது?

முஸ்லிம் கட்சித் தலைவர்கள், எம்.பிக்களை, முஸ்லிம் சமூகத்தில் உள்ள கல்விச் சமூகமோ அழுத்தக் குழுக்களோ வழிநடத்துவதும் இல்லை. இந்தக் குழுக்கள் உட்பட, பொது அமைப்புகளோ அல்லது வாக்காளப் பெருமக்களோ ஒரு காலத்திலும் கேள்வி எழுப்பியதும் இல்லை.

மாறாக, ஏதோவொரு காரணத்துக்காக அடுத்த தேர்தலிலும் அந்த அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பதற்கு, அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொள்வதற்கு, முஸ்லிம் சமூகம் தயாராக இருக்கின்றது.

குறிப்பிட்ட கட்சிக்காக, நமக்குத் தெரிந்தவர் என்பதற்காக, எமது ஊருக்கு எம்.பி வேண்டும் என்பதற்காக, இவரை விட்டால் வேறு யாரும் இல்லை என்பதற்காக, அவர் நமக்குத் தொழில் தந்தவர், வீதி போட்டுத் தந்தவர் என்ற அற்ப காரணங்களுக்காக, பெருமளவான மக்கள் வாக்களிக்கின்றனர்.

அரசியல்வாதிகளின் இனவாதப் பேச்சில் மயங்கி, கட்சி கீதத்தில் மெய்மறந்து, உணர்ச்சிகர வாக்குறுதிகளில் சொக்கிப்போய், இன்னும் குறிப்பிட்டளவான மக்கள் வாக்களிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, தளம்பல் நிலையிலுள்ள கீழ்மட்ட வாக்காளர்கள், கடைசித் தருணத்தில் சிறுதொகை பணத்துக்காகவும் அன்பளிப்புக்காகவும் கூட, வாக்களிக்கும் முடிவை எடுக்கின்றனர் என்பது இரகசியமல்ல.

அதேவேளை, முஸ்லிம் கட்சித் தலைவர்களும் தற்போதைய மற்றும் முன்னாள் எம்.பிக்களும் பதவி, பணத்தின் மீதான வேட்கையை ஒருபுறம் வைத்துவிட்டு, சமூகத்துக்காகக் கொஞ்சமேனும் மனச்சாட்சியுடன் செயற்பட வேண்டும் என்ற முடிவை எடுத்ததாகவும் தெரியவில்லை.

தம்மைச் சுற்றியுள்ள நான்கைந்து 'ஆமாசாமி'களையும் 'பேஸ்புக்' போராளிகளையும் இணைப்பதிகாரிகளையும் பார்த்து, 'இவர்கள்தான் முஸ்லிம் சமூகம்' என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் வரைக்கும், அரசியல்வாதிகளால் இந்த நச்சுவட்டத்தில் இருந்து வெளியில் வரவும் முடியாது.

மறுபுறத்தில், முஸ்லிம் எம்.பிக்கள் சமூகத் துரோகத்தை செய்யும்போது, 'இனிமேல் இந்த ஏமாற்றுக்காரனுகளுக்கு வாக்களிப்பதில்லை' என்றும் 'இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்' என்றும் சபதம் செய்கின்ற படித்தவர்கள் கூட, வாக்களிப்பு தினத்தில் பாவிகளுக்கு மன்னிப்பு வழங்குபவர்களாக ஆகிவிடுகின்ற நிலைமை, முஸ்லிம் சமூகத்துக்குள் மட்டும்தான் இருக்கின்றது.

இந்தப் பின்னணியில், முஸ்லிம் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாகச் செய்கின்ற தவறுகளைத் தட்டிக் கேட்பதற்கு, ஒரு சமூகமாக முஸ்லிம்கள் முன்வரவில்லை. மீண்டும் மீண்டும் தவணை முறையில் ஏமாறுவதற்கு, முஸ்லிம் சமூகம் வெட்கப்படவில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள், கற்றறிந்தோர், சிவில் சமூகம் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திலும், யாராவது முன்வந்து சமூகத்தைத் திருத்துவதற்கும் அதனூடாக அரசியல் ஒழுங்கை மாற்றியமைப்பதற்கும் முன்வருவதற்கான அறிகுறிகள் இல்லை.

ஏமாற்றுவதற்கு ஒரு கூட்டமும் காலாகாலத்துக்கும் ஏமாந்து கொண்டிருப்பதற்கு பெருமளவான மக்கள் கூட்டமும், எப்போதும் தயார்நிலையில் இருக்கின்றது.

ஆகவே 'ஒரு சமூகம் தானாகத் திருந்தாத வரை, இறைவன் அவர்களைத் திருத்துவதில்லை' என்ற இஸ்லாமிய இறை வசனம், பொய்யாகிப் போகவும் முடியாது.

## கடிதங்கள்

### பாம்புகளின் வசிப்பிடமாக மாறியுள்ள ஓட்டமாவடி சிறுவர் பூங்கா



பாம்புகளின் வசிப்பிடமாகவும் டெங்கு பரவும் இடமாகவும் மாறியுள்ள ஓட்டமாவடி சிறுவர் பூங்காவை, புனர்நிர்மாணம் செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உட்பட்ட குறித்த சிறுவர் பூங்கா, பல வருடங்களாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது. இதனால், குறித்த சிறுவர் பூங்காவும் அதைச் சுற்றியுள்ள சூழலும், புற்கள் முளைத்து, பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

அத்துடன், சிறுவர்கள் பயன்படுத்தும் விளையாட்டு உபகரணங்கள் சேதமடைந்து, அதற்குள் மழைநீர் தேங்கி நின்று, டெங்கு பெருகும் நிலை காணப்படுவதுடன், சிறுவர் பூங்கா பாம்புகளின் வசிப்பிடமாகவும் மாறியுள்ளது.

கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் குறித்த சிறுவர் பூங்காவை, பிரதேச சபை நிர்வாகம் கவனம் செலுத்தி, புனர்நிர்மாணம் செய்து, முறையாகப் பராமரித்து, சிறுவர்கள் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

–எச்.எம்.எம். பர்ஸான்

# 'தளபதி 66' நாயகி?



தளபதி விஜய் நடிக்கவிருக்கும் அடுத்த திரைப்படமான 'தளபதி 66' திரைப்படத்தை பிரபல தெலுங்கு இயக்குநர் வம்சி இயக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன், நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஒரு முழுநீள ரொமான்ஸ் திரைப்படத்தில் தளபதி விஜய் நடிக்கவிருக்கிறார் என்று செய்தி வெளியானதுடன், ஹீரோயின் யார் என்பது குறித்த தகவல்கள் கசிந்திருந்தன. ராஷ்மிகா மந்தனா, ராஷிகண்ணா, கைரா அத்வானி மற்றும் பொலிவுட் நடிகை உட்பட ஒரு சிலரின் பெயர்கள் பரிசீலனையில் இருந்தது.



இந்த நிலையில் 'தளபதி 66' திரைப்படத்தின் ஹீரோயின் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் காதலர் தினத்தில் அறிவிக்கப்படும் என செய்தி வெளியாகியுள்ளது.

# காதலர் தினத்தில் 'டான்'?






சிபிசக்கரவர்த்தி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான 'டான்' திரைப்படத்தின் படப்பிடிப்பு மற்றும் போஸ்ட் புரடக்ஷன் முடிவடைந்தது.

இந்தத் திரைப்படம் பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினத்தில் வெளியாகும் என்று செய்தி வெளியானது.

இந்த நிலையில் தற்போது 'டான்' திரைப்படம் மார்ச் 25ஆம் திகதி வெளியாக இருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவகார்த்திகேயனின் டுவிட்டர் பக்கத்தில் அட்டகாசமான வீடியோ உடன் வெளியீட்டு திகதி அறிவிக்கப்பட்டு உள்ளதுடன், திரையரங்குகளில் உலகம் முழுவதும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'டான்' திரைப்படத்தின் அதிகாரபூர்வ வெளியீட்டு திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து அவரது ரசிகர்கள் அதனை கொண்டாடி வருகின்றனர்.



# இயக்குநர் இமயத்துக்கு கொரோனா

கடந்த சில நாள்களாக தமிழகம் முழுவதும் அதிகளவானவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வருகின்றனர். அது மட்டுமின்றி திரையுலகினர் சிலரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அண்மையில், கமல்ஹாசன், த்ரிஷா, வடிவேலு உள்பட ஒருசிலர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு அதன் பின்னர் குணமாகி வீடு திரும்பி உள்ளனர்.

இந்த நிலையில் இயக்குநர் இமயம் பாரதிராஜாவுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்து அவர் வீட்டிலேயே தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு மருத்துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதனை அடுத்து பாரதிராஜா விரைவில் குணமாக வேண்டும் என அவருக்கு திரையுலகினர் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# அஜித்துடன் இணையும் மோகன்லால்?



அஜித் நடித்து முடித்துள்ள 'வலிமை' திரைப்படம் அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அஜித்தின் 61ஆவது திரைப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.

போனி கபூர் தயாரிப்பில் எச் வினோத் இயக்கத்தில் உருவாக இருக்கும் இந்தத் திரைப்படத்தின் ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருவதாகவும் நடிகர் - நடிகைகள் தெரிவு இடம்பெறுவதாகவும் கூறப்படுகிறது.

அஜித் நெகட்டிவ் பாத்திரத்தில் நடிப்பதாக ஏற்கெனவே செய்தி வெளியான நிலையில் ஒரு முக்கிய பாத்திரத்தில் மோகன்லால் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவலை படக்குழுவினர் விரைவில் உறுதி செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, 'அஜித் 61' திரைப்படத்தில் பிரகாஷ்ராஜ், தபு ஆகியோர் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியானமை குறிப்பிடத்தக்கது.





# குஷ்புவா இது?

நடிகை குஷ்பு கடந்த சில மாதங்களாக உடல் எடையை குறைத்து கொண்டு வரும் புகைப்படங்களை பதிவு செய்து வருகின்றார்.

இந்த நிலையில் அவர் தற்போது, பதிவு செய்துள்ள புகைப்படத்தை பார்த்து, குஷ்புவா இவர்? என ரசிகர்கள் ஆச்சரியத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குஷ்பு என்றாலே உடனே ரசிகர்களுக்கு ஞாபகம் வருவது அவரது குண்டான உடல்வாகு தான். அதுவே அவரது வெற்றியாகவும் இருந்தது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக அவர் தீவிர உடற்பயிற்சி செய்து உடல் எடையை குறைத்து வருவதாக அவ்வப்போது தனது இன்ஸ்டாகிராமில் தெரிவித்திருந்தார்.

உத்தரகாண்ட்

# தேர்தலில் கணவனை எதிர்த்து மனைவி போட்டி

உத்தரகாண்ட் மாநில சட்டசபை தேர்தல் ஒரே கட்டமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அந்தவகையில் சோமேஷ்வர் தொகுதியில் சமாஜ்வாடி கட்சி வேட்பாளராக பல்வந்த் ஆர்யா அறிவிக்கப்பட்டுள்ளார். பா.ஜனதா கட்சியில் இருந்த பல்வந்த் ஆர்யா, அக்கட்சி சார்பில் போட்டியிட தேர்தல் சீட்டுக் கேட்டிருந்தார். மேலும் தனது மனைவி மதுபாலாவுக்கும் தேர்தல் சீட்டை வழங்கும்படி கேட்டார். ஆனால் அவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்க பா.ஜ.க மறுத்துவிட்டது.




சோமேஷ்வர் தொகுதியில் போட்டியிட தற்போதைய எம்.எல்.ஏவும் அமைச்சரான ரேகா ஆர்யாவுக்கு பா.ஜனதா வாய்ப்பு வழங்கியது.

இதனால் பா.ஜனதாவில் இருந்து வெளியேறிய பல்வந்த் ஆர்யா சமாஜ்வாடி கட்சியில் இணைந்து சோமேஷ்வர் தொகுதியில் போட்டியிட தேர்தல் டிக்கெட்டை பெற்றார். தற்போது அவர் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அவர் வேட்பு மனுவையும் தாக்கல் செய்தார்.

இந்தநிலையில் பல்வந்த் ஆர்யாவின் மனைவி மதுபாலாவும் சோமேஷ்வர் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிடுகிறார். இதற்கான வேட்பு மனுவையும் அவர் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

அத் தொகுதியில் கணவரை எதிர்த்து மனைவி போட்டியிடுகிறார் என்றாலும் அத்தொகுதியில் வாக்குகளைப் பிரிக்க தனது மனைவியை போட்டியிட வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

சென்னை

# புற்றுநோய் வலியை மறக்கடிக்கச் செய்த இசைஞானி


சென்னையில் வசித்து வரும் சீதாலஷ்மி என்பவருக்கு கடந்த ஆண்டு மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மருத்துவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அவருக்கு, அண்மையில் அறுவை சிகிச்சை இடம்பெற்றுள்ளது.

இவ் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்து சீதாலக்ஷ்மி வீடு திரும்பிய நிலையில், மருத்துவமனை சார்பாக அவருக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் "புற்றுநோயில் இருந்து குணமடைந்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. எனக்கு அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கு மிகவும் பயமாக இருந்தது. ஆனால் சூழ்நிலை காரணமாக, அறுவை சிகிச்சைக்கு சம்மதம் தெரிவித்தேன்.





அறுவை சிகிச்சைக்கு சென்றபோது மருத்துவர்கள் மயக்க மருந்து கொடுக்க முடியாது எனக் கூறிவிட்டனர். வலியை எப்படி தாங்குவது? என்ற பயம் எனக்குள் ஏற்பட்டது. இதன்போது மருத்துவர்கள் வலியை தாங்கிக் கொள்ள என்னை பாடல் பாடச் சென்னார்கள்.

நான் பாடல் ஆசிரியராக இருந்ததால், இசைஞானி இளையராஜாவின் 'கற்பூர பொம்மை' பாடலை பாடினேன். உலகத்திலேயே புற்றுநோய் அறுவை சிகிச்சையின்போது பாடல் பாடியவாறு சிகிச்சை எடுத்துக் கொண்ட முதல் பெண் என்பது எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது" என சீதாலக்ஷ்மி தெரிவித்தார்.

அரியலூர்

# மாணவி லாவண்யா வழக்கு சி.பி.ஐக்கு மாற்றம்

அரியலூர் மாணவி லாவண்யாவின் தற்கொலை வழக்கை சிபிஐக்கு மாற்றி உயர் நீதிமன்றம் மதுரை கிளை அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியம் வடுகர்பாளையம் கீழத்தெருவை சேர்ந்தவர் லாவண்யா .

17 வயதான இவர் தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே மைக்கேல்பட்டியில் உள்ள பாடசாலையில் விடுதியில் தங்கி 12 ஆம் தரம் படித்து வந்துள்ள நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.



மேலும் பாடசாலை நிர்வாகமும், விடுதி காப்பாளர்களும் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டதாகவும், இதனாலேயே விஷம் குடித்ததாகவும் மாணவி லாவண்யா கூறுவது போன்ற வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது.

இதனை தொடர்ந்து இவ்விவகாரம் தமிழ்நாடு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அத்துடன் தனது மகளின் தற்கொலை வழக்கை சிபிசிஐடி (மத்திய புலனாய்வு அமைப்பு) விசாரிக்க வேண்டும் என மாணவி லாவணாயாவின் தந்தை முருகானந்தம் உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மாணவி லாவண்யா தற்கொலை வழக்கை சிபிஐ க்கு மாற்றி நீதிபதி அதிரடி உத்தரவு பிறப்பித்தார்.

பிண்ட்

# தரமற்ற வீதிகளை அமைத்தால் உயிரை மாய்த்துக் கொள்வேன்

## அதிகாரிகளை மிரட்டிய எம்.எல்.ஏ

"தரமற்ற வீதிகளை அமைத்தால் தூக்கிட்டு எனது உயிரை மாய்த்துக் கொள்வேன்" என எம்.எல்.ஏ ஒருவர் அதிகாரிகளை மிரட்டிய சம்பவம் மத்திய பிரதேச மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

மத்தியபிரதேச மாநிலம் பிண்ட் தொகுதியை சேர்ந்த பகுஜன் சமாஜ்வாடி கட்சி எம்.எல்.ஏ சஞ்சு சிங் குஷ்வாஹா என்பவர், அண்மையில் தனது தொகுதியில் போடப்பட்டிருந்த தார் வீதியை ஆய்வு செய்தார்.

இதன்போது குறித்த வீதி சேதமடைந்த காணப்பட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த சஞ்சு சிங் குஷ்வாஹா" வீதி அபிவிருத்திப் பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும், இல்லையென்றால் உயரமான கட்டிடத்தில் தூக்கிட்டு தனது உயிரை மாய்த்துக் கொள்வேன்" என அரச அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கர்நாடகா

# காதலிக்காக தன் உயிரை மாய்த்த காதலன்



ஒரே இளைஞரை இரண்டு பெண்கள் காதலித்ததால் காதலன் உயிரிழந்த சம்பவம் கர்நாடகாவில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மங்களூர் அருகே ராணிபுரா பகுதியை சேர்ந்தவர் லியோட் டிஜோசா. 29 வயதான இவர், ஒரு பெண்ணை 8 வருடமாக காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவரது நண்பியும், லியோட் டிஜோசாவை ஒருதலை பட்சமாக காதலித்து வந்துள்ளார். இதனையடுத்து கடற்கரையில் மூவரும் இக்காதல் விவகாரம் குறித்து பேசிக்கொண்டிருந்த வேளை வாக்குவாதம் எற்படவே, அவரது காதலி கடலில் குதித்து தன் உயிரை மாய்க்க முயற்சி செய்துள்ளார்.

பதறி போன டிசோசா கடலில் குதித்து அவரை உயிருடன் மீட்டார். எனினும் கடலில் இருந்து கரை வந்தபோது இருவரும் மயக்க நிலையில் இருந்ததால் அவரது தோழி, இருவரையும் அங்கிருந்த நபர்களின் உதவியோடு, மருத்துவமனையில் சேர்த்தார்.

எனினும் வைத்தியசாலை செல்லும் வழியிலேயே டிஜோசா உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதனை ரீதியாக

# 21ஆவது கிராண்ட் ஸ்லாமை வென்ற நடால்



சாதனை ரீதியாக 21ஆவது கிராண்ட் ஸ்லாமை உலகின் ஐந்தாம் நிலை வீரரான ரஃபேல் நடால் கைப்பற்றியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேணில் நடைபெற்று வந்த அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் சம்பியனானதன் மூலமே 21ஆவது கிராண்ட் ஸ்லாமை ஸ்பெய்னின் நடால் கைப்பற்றியுள்ளார்.

அந்தவகையில், அதிக கிராண்ட் ஸ்லாம்களை கைப்பற்றிய வீரராக 35 வயதான நடால் காணப்படுகின்ற நிலையில், இரண்டாமிடத்தில் 20 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களுடன் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச்சும், சுவிற்ஸர்லாந்தின் றொஜர் பெடரரும் காணப்படுகின்றனர்.

இந்நிலையில், அவுஸ்திரேலிய பகிரங்க இறுதிப் போட்டியில் உலகின் இரண்டாம் நிலை வீரரான டனில் மெட்வெடெவ்வை வென்றே நடால் சம்பியனாகியிருந்தார்.

இப்போட்டியின் முதலாவது செட்டை 2-6 என இழந்திருந்த நடால், இரண்டாவது செட்டில் 4-1 என முன்னிலை வகித்திருந்தபோதும் இறுதியில் 6-7 (5-7) என்ற ரீதியில் இழந்திருந்தார்.

அந்தவகையில், அபாரமானதொரு மீள்வருகையைப் புரிந்து தீர்மானமிக்கதாக அமைந்த அடுத்த மூன்று செட்களையும் 6-4, 6-4, 7-5 என்ற ரீதியில் கைப்பற்றியே நடால் சம்பியனாயிருந்தார்.

தனது அரையிறுதிப் போட்டியில் உலகின் தற்போதைய ஆறாம் நிலை வீரரான இத்தாலியின் மட்டியோ பெரெட்டினியை 6-3, 6-2, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் நடாலும், தனது அரையிறுதிப் போட்டியில் உலகின் நான்காம் நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபனோஸ் சிட்டிபாஸை 7-6 (7-5), 4-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் மெட்வெடெவ்வும் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணம்:

## ஐந்தாமிடப் போட்டியில் இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரின் ஐந்தாமிடப் போட்டிக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் அன்டிகுவாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாமிடத்துக்கான அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவை வென்றே ஐந்தாமிடத்துக்கான போட்டிக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

இலங்கை: 232/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: டுனித் வெல்லலாகே 113 (130), றனுட சோமரத்ன 57 (70), ஷெவோன் டானியல் 29 (54) ஓட்டங்கள். பந்துவீச்சு: கவெனா மப்ஹகா 3/60 [10], மத்தியூ போஸ்ட் 2/21 [9], டெவால்ட் பிறெவிஸ் 1/52 [10], மிஷெல் கோப்லண்ட் 0/35 [10], அன்டிலி சிமெலென் 0/21 [5], அஷ்க்கே தஸாகா 0/37 [6])

தென்னாபிரிக்கா: 167/10 (37.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜெர்ஹார்டஸ் மரீ 44 (43), றொனான் ஹெர்மன் 34 (40), அன்டிலி சிமெலேன் 20 (26), மிஷெல் கோப்லன்ட் 20 (27), மத்தியூ போஸ்ட் 14 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: றவீன் டி சில்வா 2/14 [5], ஷெவோன் டானியல் 2/28 [5.3], ட்ரவீன் மத்தியூ 2/41 [10], டுனித் வெல்லலாகே 1/29 [6], வனுஜ சஹான் 1/29 [7])போட்டியின் நாயகன்: டுனித் வெல்லலாகே



## தங்கம் வென்ற இந்துகாதேவி கௌரவிப்பு நிகழ்வு

**சண்முகம் தவசீலன்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதிய நகர் கிராமத்தை சேர்ந்த கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டையில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார்

இந்துகாதேவிக்கான கௌரவிப்பு நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கரிப்பட்ட முறிப்பு புதியநகர் கிராமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது

இந்துகாதேவியை கௌரவிக்கும் நோக்கில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றை ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

அந்தவகையில் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு புதிய நகர் புதிய சூரியன் விளையாட்டு மைதானத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் புதிய சூரியன் விளையாட்டு கழகம் என்பன இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதனும், சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பரமோதயன் ஜெயராணி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் நா. குகேந்திரா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்துகாதேவியின் வீட்டில் இருந்து உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானம் வரை அவர் மற்றும் அவருடைய தாயார், அம்மம்மா, அம்மப்பா மற்றும் விருந்தினர்கள் கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்ளி பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இங்கிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள்

இங்கிலாந்துக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் நேற்று நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் வென்றதன் மூலமே 3-2 என தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் கெரான் பொலார்ட், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், றொவ்மன் பவலின் ஆட்டமிழக்காத 35 (17), கெரான் ஆட்டமிழக்காத 41 (25), கைல் மேயர்ஸின் 31 (19), பிரண்டன் கிங்கின் 34 (31)




ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அடில் ரஷீட் 4-0-17-2, லியாம் லிவிங்ஸ்டோன் 3-0-17-2, மொயின் அலி 3-0-20-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 180 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சார்பாக ஜேம்ஸ் வின்ஸ் 55 (35), சாம் பில்லிங்ஸ் 41 (28) ஓட்டங்களைப் பெற்றபோதும், முதலில் அகீல் ஹொஸைனிடமும், இனிங்ஸின் இறுதி நான்கு பந்துகளில் ஜேஸன் ஹோல்டரிடமும் தலா நான்கு விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், அகீல் ஹொஸைன் 4-0-30-4, ஜேஸன் ஹோல்டர் 2.5-0-27-5, ஷெல்டன் கோட்ரல் 3-0-21-0, கெரான் பொலார்ட் 2-0-15-0, றொமாறியோ ஷெப்பர்ட் 1-0-7-0, பேபியன் அலன் 3-0-17-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

கொங்கோ

ஐ.நா. அதிகாரிகளின் கொலை வழக்கு:

# 51 பேருக்கு தூக்கு



ஐ.நா. அதிகாரிகள் இருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் 51 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் உள்நாட்டுப்போர் பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. இதனால், அந்நாட்டில் பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் உருவெடுத்துள்ளது.

அந்தவகையில் கடந்த 2017ஆம் ஆண்டு அரசுப்படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே வெடித்த வன்முறையில் பலர் கொல்லப்பட்டர்.

இச்சம்பவம் குறித்து ஐ.நா. சபைக்கு அறிக்கை அளிக்க அமெரிக்காவை சேர்ந்த மைக்கேல் ஷார்ப் மற்றும் ஸ்வீடனை சேர்ந்த ஷைடா ஹடலன் ஆகியோர் விசாரணை அதிகாரிகளாக செயல்பட்டனர்.

குறித்த அதிகாரிகள் வன்முறை நடந்த பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ள கசை மாகாணத்தில் காரில் சென்றபோது ஆயுதமேந்திய கிளர்ச்சி கும்பலால் கடத்தி கொலை செய்யப்பட்டனர்.

இந்த இரட்டை கொலை வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட காங்கோ கொலையில் தொடர்புடையவர்கள் என 54 பேர் மீது வழக்குபதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் பல ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு இவ் வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வெளியானது.

அத் தீர்ப்பில் குற்றம்சாட்டப்பட்ட 54 பேரில் 51 பேர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளதோடு அவர்களுக்கு தூக்குதண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அமெரிக்கா

## மாடியில் இருந்து விழுந்து உலக அழகி உயிரிழப்பு





கடந்த 2019 ஆம் ஆண்டு நார்த் கரோலினா பகுதியில் நடைபெற்ற உலக அழகி போட்டியில் பட்டம் வென்றவர் செஸ்லி கிரிஸ்ட் (*cheslie kryst*).

30 வயதான இவர் நியூயோர்க் நகரில் உள்ள 60 மாடி குடியிருப்பில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 9ஆவது மாடியில் இருந்து கீழே விழுந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கிறிஸ்டின் மரணம் தற்கொலையா என்பது குறித்து பரிசோதனை பின்னரே தெரியவரும்.

டுபாய்



## ‘பறக்கும் படகு’

ஹைட்ரஜன் எரிபொருள் மூலமாக இயங்கும் ‘பறக்கும் படகு’ முதல் முறையாக டுபாயில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

டுபாயில், சுவிட்சர்லாந்து நாட்டு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அமீரக நிறுவனத்தின் கூட்டு முயற்சியில், தி ஜெட் என்ற பெயருடைய பறக்கும் படகு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.


சொகுசு படகாக உருவாக்கப்பட்டுள்ள இதில் 8 முதல் 12 பேர் வரை பயணம் செய்ய முடியும் எனவும், மணிக்கு 75 கி.மீ வேகத்தில் செல்லும் திறனுடையது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் இரண்டு எரிபொருள் செல்கள் பொருத்தப்பட்டுள்ளதோடு

ஹைட்ரஜன் எரிசக்தியால் இயங்கும் இந்த படகின் வெள்ளோட்டம் விரைவில் துபாய் கடல் பகுதியில் காண முடியும் என அந்த தனியார் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் இப் படகு இயங்கும்போது சத்தம் வருவது இல்லை எனவும் தண்ணீருக்கு 80 செ.மீ உயரத்திற்கு மேல் பறந்து செல்லும் எனவும், ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்குவதால் இதில் இருந்து புகை போன்ற உமிழ்வுகள் வெளியேறுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா



## காந்தியின் அஸ்தியால் சர்ச்சை

மகாத்மா காந்தியின் அஸ்தி தங்களிடம் இருப்பதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆச்சிரமம் ஒன்று தெரிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

1948ம் ஆண்டு காந்தி படுகொலை செய்யப்பட்டதால் இறுதிச் சடங்குகளுக்குப் பின் அவரது அஸ்தி 20க்கும் மேற்பட்ட பகுதிகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதில் சில வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந் நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் காந்தி உலக அமைதி நினைவுச் சின்னம் உள்ளது.

இதனை 1950ல் பரமஹன்ச யோகானந்தா என்பவர் நிறுவியதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் குறித்த நினைவுச் சின்னத்தில் காந்தியின் அஸ்தி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனை காந்தியின் வழித்தோன்றல்கள் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா



## கோர விபத்தில் 9 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவில் நேற்று முன்தினம் (30 ) இடம்பெற்ற வாகன விபத்தில் குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள லாஸ் வேகாஸ் வீதியில் அதிவேகத்தில் சென்ற வாகனமொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகே வந்த வாகனத்துடன் மோதியதில் அடுத்தடுத்து வந்த 6 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோர விபத்தில் சிக்கி குழந்தைகள் உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன் , 6 பேர் பலத்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் சுட்டுக் கொலை

மெக்சிகோவின் குவானாஜுவாடோ பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த 6 பேரில் இருவர் பெண்கள் எனவும் தெரிவித்துள்ள பொலிஸார் இக் கொடூர செயலை செய்தவர்கள் தொடர்பிலானஆதாரங்கள் அந்த பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மெக்சிகோவின் மத்திய மாநிலமான குவானாஜுவாடோவில் இரண்டு போதைப்பொருள் கடத்தல் குழுக்கள் இடையே ஏற்பட்ட தகராறு வன்முறையாக மாறி உள்ளது.

இந்த குழுக்களை சேர்ந்தவர்கள் இந்த குற்றத்தில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 01 பெப்ரவரி 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.